# இணையம்

தென் கரோலினா தமிழ்ச் சங்க வெளியீடு 11/2013



ஆசிரியர்: வெங்கட் நடராஜன்

# இணையம்

**நாவலன் தீவு**




இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்க, இலங்கை மற்றும் இன்றுள்ள சில சிறு, சிறு தீவுகளை இணைத்தவாறு இருந்த ஒரு பிரம்மாண்டமான இடந்தான் “குமரிக்கண்டம்”.

இங்கு தான் உலகின் முதல் மனிதன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். இங்கு தான் நம் மூதாதையர் வாழ்ந்தனர். இங்கு தான் நாம் இன்று பேசிக்கொண்டிருக்கும் நம் தமிழ் பிறந்தது. இங்கு தான் இன்னும் பல வரலாற்று அதிசயங்கள் நிகழ்ந்துள்ளது. ஆம்..! இதுதான் “நாவலன் தீவு” என்று அழைக்கப்பட்ட “குமரிக்கண்டம்”. கடலுக்கடியில் இன்று அமைதியாக உறங்கிக்கி கொண்டிருக்கும் இது ஒரு காலத்தில் பிரம்மாண்டமாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு தமிழ்க்கண்டம். ஏழு தெங்கநாடு, ஏழு மதுரைநாடு, ஏழு முன்பலைநாடு, ஏழு பின்பலைநாடு, ஏழு குன்றநாடு, ஏழு குனக்கரைநாடு, ஏழு குரும்பனைநாடு என இங்கு நாற்பது ஒன்பது நாடுகள் இருந்துள்ளது. பறுளி, குமரி என்ற இரண்டு ஆறுகள் ஓடியுள்ளது.குமரிக்கொடு,மணிமலை என இரண்டு மலைகள் இருந்துள்ளது !!.

தென்மதுரை,கபாடபுரம்,முத்தூர் என பிரம்மாண்டமான மூன்று நகரங்கள் இருந்தன.உலகின் தொன்மையான நாகரீகம் என்று அழைக்கப்படும் சுமரியன் நாகரீகம் வெறும் நான்காயிரம் வருடங்கள் முந்தையது தான். நக்கீரர் “இறையனார் அகப்பொருள்” என்ற நூலில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 வருடங்கள் தொடர்து நடைபெற்றதாக கூறியுள்ளார். தமிழின் முதல் சங்கம் இந்த கடலடியில் உள்ள “தென் மதுரையில்” கி.மு 4440இல் 4449 புலவர்கள்களுடன் சிவன், முருகர், அகத்தியருடன் 39மன்னர்களும் இணைந்து, “பரிபாடல், முதுநாரை, முடுகுருக்கு, கலரியவிரை, பேரதிகாரம்” ஆகிய நூல்களை இயற்றப்பட்டது .இதில் அனைத்துமே அழிந்துவிட்டது. இரண்டாம் தமிழ்ச் சங்கம் “கபாடபுரம்” நகரத்தில் கி.மு 3700இல் 3700புலவர்கள்களுடன் “அகத்தியம், தொல்காப்பியம், பூதபுராணம், மாபுராணம்” ஆகிய நூல்கள் இயற்றப்பட்டது . இதில் தொல்காப்பியம் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளது.

மூன்றாம் தமிழ்ச் சங்கம் இன்றைய “மதுரையில்” கி.மு 1850 இல் 449 புலவர்கள்களுடன் அகநானூறு, புறநானூறு,நாலடியார், திருக்குறள் ஆகிய நூல்கள் இயற்றப்பட்டது. இவ்வளவு பழமையான தமிழனின் வரலாற்றை பெருமையுடன் உலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய இந்திய அரசு எந்த அக்கறையும் காட்டாமல் இருப்பது வேதனையான விடயம். இந்திய அரசு வெளிக்கொண்டுவராத நம் வரலாற்றை நாமே இந்த உலகிற்கு பரப்புவோம். இனிமேல் நாம் 2000 வருடம் பழமையானவர்கள் என்ற பழங்கதையை விட்டு விட்டு 20,000 வருட உலகின் முதல் இனம் ,நம் தமிழ் இனம் என்று பெருமையுடன் கூறுவோம். வரலாற்று தேடல் தொடரும்....! தமிழ் மொழி என்றும் வாழிய வாழியவே!

http://www.youtube.com/watch?v=auNmfvqj8zs#t=94

# இணையம்

எந்த மொழியிலும் இல்லாத Decimal Calculation !!!!!!!
தமிழக கோயில் சிற்பங்களில் உள்ள நுணுக்கமான வேலைப்பாடுகலாகட்டும் , தூண்களில் ஒரு நூல் இழை கூட கோணல் இல்லாமல் கட்டபட்ட 1000 கால் மண்டபங்கலாகட்டும் , இன்னும் ஆதித் தமிழர்கள் செய்த அற்புதமான விசயங்களை பற்றி வியப்புடன் பேசும் நாம், இதைப்பற்றிய தேடலை மேற்கொண்டோமா?

1 - ஒன்று
3/4 - முக்கால்
1/2 - அரை கால்
1/4 - கால்
1/5 - நாலுமா
3/16 - மூன்று வீசம்
3/20 - மூன்றுமா
1/8 - அரைக்கால்
1/10 - இருமா
1/16 - மாகாணி(வீசம்)
1/20 - ஒருமா
3/64 - முக்கால்வீசம்
3/80 - முக்காணி
1/32 - அரைவீசம்
1/40 - அரைமா
1/64 - கால் வீசம்
1/80 - காணி
3/320 - அரைக்காணி முந்திரி
1/160 - அரைக்காணி
1/320 - முந்திரி
1/102400 - கீழ்முந்திரி
1/2150400 - இம்மி
1/23654400 - மும்மி
1/165580800 - அணு --> ≈ 6,0393476E-9 --> ≈ nano = 0.000000001
1/1490227200 - குணம்
1/7451136000 - பந்தம்
1/44706816000 - பாகம்
1/312947712000 - விந்தம்
1/5320111104000 - நாகவிந்தம்
1/74481555456000 - சிந்தை
1/489631109120000 - கதிர்முனை
1/9585244364800000 - குரல்வளைப்படி
1/575114661888000000 - வெள்ளம்
1/57511466188800000000 - நுண்மணல்
1/2323824530227200000000 - தேர்த்துகள்.

இவ்வளவு கணிதம் அந்த காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது !!!!!!!! இந்த எண்களை வைத்து எத்தனை துல்லியமான வேலைகள் நடந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள், கணினியையும் ,கால்குலேட்டரையும் தொழில் நுட்ப வளர்ச்சி என்று இன்றைய தலை முறை கூறிக்கொண்டு இருக்கும் போது, அதை விட ஆயிரம் மடங்கு மேலாக அந்த காலத்திலேயே நம் தமிழன் சாதித்துள்ளான்.

# இணையம்

## நலமாய் வாழ

### தும்மல்

தும்மல் என்றால் என்ன? அது எப்பொழுது வருகிறது. யாருக்குமே எப்பொழுதும் தும்மல் வராது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே தும்மல் வரும். நன்றாக யோசித்துப்பாருங்கள். ஒரு பழைய துணியை எடுத்து உதறினால், அதில் இருக்கும் தூசுக்கள் மூக்கின் வழியாக உள்ளே செல்லும்பொழுது தும்மல் வரும். அல்லது காலையில் சாலையில் நடக்கும்பொழுது யாராவது ரோட்டை பெருக்கிக்கொண்டிருந்தால் அதில் வரும் தூசியின் மூலமாக தும்மல் வரும். சூடாக சாப்பிடும்பொழுது தும்மல் வரும். காரமாக சாப்பிடும்பொழுது வரும். அல்லது வீட்டில் அடுப்பில் மிளகாய் போன்ற காரமான பொருட்களை வேகவைக்கும்பொழுது வரும். காரம் மூக்கில் வழியாக நுழையும்பொழுது தும்மல் வரும்.

தும்மல் என்றால் என்ன? மூக்கின் வழியாக நுரையீரலுக்குள் உடலுக்கு கெடுதல் விளைவிக்கும் தூசுக்கள், வெப்பம், காரம், கிருமிகள் நுழையும்பொழுது நம் நுரையீரல் பயப்படும். உடனே நுரையீரல் நம் உடலில் உள்ள ஒரு மருத்துவரிடம் சென்று எனக்குள்ளே ஒரு நாற்பது தூசுகள் வந்து விட்டன. இதனால் எனக்கு ஆபத்து எனவே இதை வெளியேற்ற வேண்டும் என்று கேட்கும். நமது உடலில் உள்ள மருத்துவர் உடனே தும்மல் சுரப்பி என்ற ஹிஸ்டமைன் சுரப்பியிடம் அந்த வேலையை கொடுப்பார். தும்மல் சுரப்பி நுரையீரலுக்குச் சென்று ஆராய்ச்சி செய்வார். இங்கே நாற்பது தூசுக்கள் உள்ளன. எனவே ஒரு நாலு தும்மல் மூலமாக இந்த தூசுகளை வெளியேற்றலாம் என்று முடிவு செய்து தும்மலுக்கு தேவையான சத்தியை உடலிலிருந்து பெற்று காற்று தேவையான அளவு எடுத்து தும்மல் வரும்பொழுது அதில் நீர்த்துளிகள் வரும். எனவே உடலில் உள்ள தும்மலுக்கு தேவையான நீரை உறிஞ்சி நமக்கு தெரியாமல் நம்மையும் மீறி நான்கு முறை காற்றுடன் தண்ணீரைக்கொண்டு அந்த நாற்பது தூசிகளையும் வேகமாக நுரையீரலிலிருந்து வெளியேற்றும் ஒரு அற்புதமான கழிவு நீக்கம் என்ற வேலைதான் தும்மல்.

தும்மல் என்பது நமது கட்டுப்பாட்டில் கிடையாது. நம்மை மீறி திடீரென வருகிறது. எனவே தும்மல் என்பது ஒரு நோய் கிடையாது. தும்மல் நம் உடல் பார்க்கும் வைத்தியம். ஆனால் நாம் தும்மல் வரும்பொழுது அதை அடக்க நினைக்கிறோம். சிலர் அலுவலகத்திலோ மீட்டிங்கிலோ இருக்கும்பொழுது தும்மல் வராமல் அடக்குகிறோம். இப்படி தும்மல் வரும்பொழுது அடக்கினால் அதற்கு பெயர் தான் நோய். சிலர் தும்மல் வரும்பொழுது அதை நிறுத்துவதற்கு தைலம் போன்ற பொருட்களை பயன்படுத்துகிறார்கள். தும்மல் வரும்பொழுது தைலம் பயன்படுத்தினால் என்ன நடக்கும். தைலத்தின் வாசம் உடலுக்குள் புகுந்து தும்மல் சுரப்பியை வேலை செய்யாமல் இருக்குமாறு கட்டளையிடும். நமது உடலிலுள்ள கழிவை வெளியே வீசும் மருத்துவம் செய்யும் தும்மல் சுரப்பியை வேலை செய்ய வேண்டாம் என்று தடுப்பது நமது உடலுக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

இப்படி தைலத்தின் வாசம் இருக்கும்வரை நமக்கு தும்மல் வராது. நாம் நினைத்துக்கொள்கிறோம் தும்மலை குணப்படுத்திவிட்டோம் என்று. கண்டிப்பாக கிடையாது. நீங்கள் கழிவை வெளியேற்றும் ஒரு செயலை நிறுத்திவிட்டீர்கள். சுமார் ஒரு நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்கு இந்த தைலத்தின் வாசம் இருக்கும்வரை தும்மல் சுரப்பி சுரக்காது. ஏற்கனவே நாற்பது தூசுகள் உள்ளே சென்ற நிலையில் தும்மல் சுரப்பி சுரக்காவிட்டால் இந்த ஐந்து மணி நேரத்தில் நாலாயிரம் தூசுகள் நம் நுரையீரலுக்குள் புகுந்துவிடும். எனவே தும்மல் வரும்பொழுது அதை நிறுத்துவதற்கு எந்த வைத்தியமும் செய்யக்கூடாது. நாம் இருக்கும் இடத்தில் காற்றில் காற்று கெட்டு விட்டது என்று புரிந்து நாம் அந்த இடத்தை விட்டு வெளியே வரவேண்டும் அல்லது காற்றாடி போன்ற பொருட்களை பயன்படுத்த வேண்டும். அல்லது முகத்தில் துணியை கட்டிக்கொள்ளவேண்டும்.

இப்படி காற்றை சுத்தம் செய்வதைப்பற்றித்தான் யோசிக்கவேண்டுமே தவிர தும்மலை நிறுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடாது. எனவே, தும்மல் என்பது ஒரு நோயே கிடையாது. தும்மல் வந்தால் நன்றாக தும்ம வேண்டும் என்பது மட்டுமே மருத்துவம் ஆகும். தும்மலுக்கு ஒரே சிகிச்சை தும்ம வேண்டும். இதைத் தவிர எதைச் செய்தாலும் அது உடலுக்கு கெடுதல் உண்டு செய்யும்.

Hr. Baskar அவர்களின் Anatomic Therapy புத்தகத்தின் தழுவல்....

# இணையம்

**சிறுவர் பகுதி**

*யாதும் ஊரே! யாவரும் கேளீர்!*



-நித்தின் பாண்டியன் (ஆறாம் வகுப்பு)

# இணையம்

**Chettinad Mushroom Curry**

Ingredients-1

| | |
|---|---|
| 3 nos | Dry red chilli |
| 5 tsp | Coriander seeds |
| 1 tsp | Black pepper corns |
| ½ tsp | Cumin seeds |
| ½ tsp | Fennel seeds |
| 1 tsp | Poppy seeds |
| 1 tsp | Split roasted gram/pottukadalai |
| 1 no | Cardamom |
| 1 no | Clove |
| 1 no | Cinnamon stick (very small) |
| 1 no | Mace/jathipoo(just one petal) |
| 1 no | Star anise (just 1 small petal) |
| 1 pinch | Nutmeg powder |
| 3 tsp | Dry coconut flakes/ desicated / coparai thengai |

Ingredients-2

| | |
|---|---|
| 15 nos | Shallots (sambar onions) |
| ½ inch | Ginger |
| 3 clove | Garlic |
| 5 nos | Curry leaves |
| ¼ tsp | Turmeric powder |

Ingredients-3

| | |
|---|---|
| 4 nos | White button mushrooms |
| 1 no | Tomato (diced) |
| 1 no | Green chili (slit open) |
| 1 no | Bay leaf |
| 5 nos | Curry leaves |
| 3 stks | Coriander leaves (chopped for garnishing) |
| ½ tsp | Salt (or to taste) |
| 4 tsp | Oil |

Instructions

Clean the mushroom with a damp paper towel, cut them into thin pieces and keep aside. Dry roast each ingredient from this list one by one(Dry red chilli , coriander seeds, black peppercorn, cumin seeds, fennel seeds, poppy seeds, pottukadalai/split roasted gram, coconut flakes). Dry toast this set in one batch(cloves, cinnamon, cardamon, mace flower, star anise and nutmeg).

Combine all the dry roasted items from table-1 with all ingredients from table-2 (Shallots+ginger+garlic+curry leaves +turmeric powder) and grind to make a fine paste and keep aside.

Now heat oil in a pan, drop in the bay leaves, kalpasi, green chilli and curry leaves. Fry them to toast, followed by the sliced mushrooms. Saute for few minutes and then add the ground masala. Keep frying till the masala turns golden brown. Add the chopped tomatoes, cover and cook for few minutes (2 to 3 minutes), then add salt. Simmer for 5 minutes, when you see the oil separating, garnish with coriander leaves and switch off. Serve hot with roti or rice.

-Lydia Ravi

# இணையம்

**ஆரம்பம்**

முகிலில் இருந்து உதிர்ந்த முத்து
மண்ணில் வாழும் ஜீவன்களின் சொத்து
உன் சத்தம் என் ஆனந்தம்
அதுவே என் மனதுக்கு நிசப்தம்
காற்றுடன் நீ அசைந்தால் நடனம்
மண்ணில் நீ குதித்தால் தாளம்
முற்றத்தில் விழுந்தால் முனுமுனுப்பு
சன்னலில் விழுந்தால் சலசலப்பு
நீ நதியானால் நல்லோசை
அருவியானால் ஆரவார இசை
விசை சக்கரத்தை சுற்றினால் மின்சாரம்
விரைந்து வயலில் பாய்ந்தால் விவசாயம்
நிரைவாய் நீ சேருமிடம் கடல்
ஆனால் அது நிரைவல்ல, உன்
அடுத்த பயணத்தின் ஆரம்பமே!
மேகத்திற்கு செல்வாய் நீராவியாக
மீண்டும் வருவாய் மழை துளியாக!

**ஆவளி வாழ்த்துரை**

'அ' என்றால் அம்மா என்றிருந்த எங்கள்
குழந்தைகட்கு அறிஞர் என்றும் அரசன்
என்றும் போதித்து தாய் மொழியை எளிமையாய்
ஊட்டிய ரகுப்பாவான தமிழாசிரியரே !

அணு இல்லாமல் உயிரில்லை என்ற
இவ்வுலகில் அணு உலை எரிபொருளையும்
அணு உலையையும் ஆட்டி ஆளும் திறன்
கொண்ட அணுசக்தி விஞ்ஞானியே !

அன்பிற்கினிய மனைவியாய் பாசத்திற்குரிய
தோழியாய்
நிறைகுடம் தளும்பாது என்ற முதுமொழிக்கேற்ப
எளிமையுடன் தாழ்மையும் சேர்ந்த பண்பை பெற்ற
முனைவர் விஜியப் பெருந்தகையே !

அப்பாவிற்கு தப்பாமல் பிறந்த பிள்ளையாய்
அம்மாவின் ஆசையில் வளர்ந்த இளைஞனாய்
அரிசி(!) கல்வி கழகத்தில் செம்மையுற பயிற்சி
பெரும் சூர்யப் புத்திரனே !

அகவை ஆறிலேயே இயலிசை நாட்டியமென
முத்தமிழிலும் தேர்ந்த இளம் குமரியாய்
வண்ணத்து பூச்சியென மகிழ்ச்சி பொங்க சுற்றி
வரும் வேதாப் புத்திரியே !

அன்புடன் தொண்டாற்றிய தங்கள் குடும்பத்தினை
கொலம்பியா மக்கள் என்றும் மறவோமே !
இரும்பு நகருக்கு இடம்பெயரும் உங்கள் வாழ்வு
கரும்பென இனித்திட வாழ்த்துவோமே !

-- சரவணன் கிருஷ்ணமூர்த்தி

ஆபத்துக் குதவாப்பிள்ளை யரும்பசிக் குதவாவன்னந்
தாபத்தைத் தீராத்தண்ணீர் தரித்திர மறியாப்பெண்டீர்
கோபத்தை யடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தை தீராத்தீர்த்தம் பயனில்லை யேழுந்தான்

ஆபத்துக்கு உதவாத பிள்ளை, கடும் பசியை போக்காத உணவு, தாகத்தை தீர்க்காத தண்ணீர், வறுமை நிலையறியாது ஆடம்பரச் செலவு செய்யும் பெண்கள், சினத்தை அடக்க முடியாத அரசன்(தலைவன்), குருவின் உபதேசத்தை உணராத மாணவன், பாவங்களை அல்லது குறைகளை தீர்க்காத தீர்த்தம் (கோவில்) ஆகிய எழாலும் எப்பயனுமில்லையாம்.

கரியொரு திங்களாறு கானவன் மூன்றுநாளும்
இரிதலைப் புற்றில்நாக மின்றுணு மிரையீதன்று
விரிதலை வேடன்கையில் விற்குதை நரம்பைக்கவ்வி
நரியினார் பட்டபாடு நாளையே படுவர்தாமே

வேடன் ஒருவன் யானையைக் கொல்ல, பாம்பு கடிபட்டு வேடன் இறக்க, இறக்குமுன் வேடன் பாம்பைக் கொல்ல, இதைக்கண்ட நரி ஒன்று, யானையை ஆறு மதத்திற்கும், வேடனை மூன்று மாதத்திற்கும், பாம்பை இன்று ஒரு நாளைக்கும் வைத்து சாப்பிடலாம் என்று கணக்கு போட்டது. பேராசைக் கொண்ட நரி, வேடன் கையில் இருந்த வில் நாணை இழுக்க, அம்பு பட்டு நரி இறந்தது. ஆகவே நல்ல ஒரு எதிர்காலம் வரட்டும் என்று காத்திராமல், வாழ்கையை இன்றே வாழ்ந்து மகிழுங்கள்.

--விவேக சிந்தாமணி

# இணையம்

**தமிழர் திருவிழா 2014**




தமிழர் திருவிழா 2014 லெக்சிங்டன் நடுநிலைப் பள்ளியில் பிப்ரவரி 1 ஆம் தேதி நடைப்பெற உள்ளது.நீங்கள் அனைவரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்கவும்.